# 5. மீன்வளம்

மீன் வளர்ப்பின் மூலம் உற்பத்தியினைப் பெருக்க, தமிழக அரசு, அரசாணை (நிலை)எண்.238, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 16.10.97 மூலம் (அ) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம், உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை திட்டம், நன்னீர் இறால் வளர்ப்பு தொழிற்சாலைகளை அமைக்கும் திட்டம், உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளை அமைக்கும் திட்டம், நவீன மீன்பிடித் தொழில் நுட்பத்தில் மீனவர்களுக்கான ஊக்கத் தொகையுடன் கூடிய பயிற்சித் திட்டம், சுத்தமான கொள்கலன்கள் மற்றும் மூன்று சக்கர மிதிவண்டிகள் ஆகியவற்றை மீனவர்களுக்கு வழங்கும் திட்டம் போன்ற இதர திட்டங்களுக்கான தகுதிவாய்ந்த பயனாளிகளைக் கண்டறிதல், பொறுப்புகளை கிராம ஊராட்சிகளுக்கும் (ஆ) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பினை செயல்படுத்த பயனீட்டாளர்களை கண்டறிந்து செயல்படுத்துதல் போன்ற இதர திட்டங்களுக்கான தகுதி வாய்ந்த பயனாளிகளைக் கண்டறிதல், நன்னீர் இறால் வளர்ப்பு தொழிற்சாலையை அமைக்கும் திட்டத்தை அமைக்க தூண்டுதல், முறையாக இறால் மீன் வளர்ப்பு மையங்களை அமைத்தல் ஆகியவற்றிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவி செய்தல், கடல் அரிப்புத் தடுப்புத் திட்டங்களுக்கான நிதியுதவி திட்டத்திற்கான செயல் திட்டங்ககளைத் தயாரித்தல், மீனவர் தொகுதி காப்புறுதி திட்டம் மற்றும் மீனவர் சேமிப்பு நிவாரண திட்டம் ஆகியவற்றை செயல்படுத்துதல் போன்ற பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கும் (இ) மாவட்ட ஊராட்சிகளைப் பொறுத்தவரை மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம், உள்நாட்டு நீர் நிலைகளில் மீன்வளத்தை பயன்படுத்தி விற்பனை செய்யும் திட்டம், நன்னீர் இறால் வளர்ப்பு தொழிற்சாலையை அமைக்கும் திட்டம், தூண்டுதல் முறை இறால் மீன் வளர்ப்பு மையங்களை நிறுவும் திட்டம் மற்றும் பிற திட்டங்களுக்கு தேவையான திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் மறு ஆய்வு செய்தல், மீன்பிடி துறைமுகங்களை மேம்படுத்தும் பொருட்டு ஆலோசனைகளை வழங்குதல் போன்ற அதிகாரங்கள் மாவட்ட ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்க ஆராய்ந்த குழு கீழ்க்கண்ட

பரிந்துரைகளைச் செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. அரசுக்குச் சொந்தமான நீர்த்தேக்கங்களில் மீன்பிடி உரிமம் பெறுவதற்குரியவர்களையும், படகுகள், வலைகள் மற்றும் ஏனைய மீன்பிடி தளவாடப் பொருட்களை ஊராட்சி ஒன்றியம் மூலம் பெற தகுதியுடையவர்களை கண்டறிதல்.

2. படகுகள், வலைகள் மீன்பிடி தளவாடங்களை தனிநபர்/ கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கவும், மீனவர் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதற்கும் உதவுதல் மற்றும் தகுதியுடையவர்களைக் கண்டறிதல் - கடும் வானிலைக் காலத்தில் விழிப்புணர்வு ஊட்டவும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், விழிப்புணர்வு முகாம்கள் ஏற்பாடு செய்தல்.

3. சுகாதாரச் சூழலில் மீன்கடைகளை அமைப்பதையும், அங்காடியில் விற்கப்படும் மீன்கள் தரத்தை ஆய்வு செய்வது மற்றும் மீன் பதப்படுத்தும் பிரிவுகளுக்கிடையே சீரான நல்லுறவை ஏற்படுத்தவும் ஊக்குவித்தல்.

4. தொகுதி காப்புறுதித் திட்டங்களின்கீழ் மீனவர் சேர்ந்து கொள்வதை ஊக்குவித்தல் - புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு இட உதவி அளிப்பதில் மற்றும் இழப்பு/சேதம் குறித்து மதிப்பீடு செய்வதில் உதவுதல் - மீனவர் வீட்டு வசதித் திட்டத்தை உயர்வடையச் செய்தல் மற்றும் தகுதியான மீனவர்களைக் கண்டறிதல் - மிக வேக டீசல் எண்ணெய் மற்றம் இதர முதலீடுகளுக்கு ஆயத் தீர்வை ஈடு செய்து வழங்கும் பணிகளை எளிதாக்க வசதி செய்தல்.

5. மீனவர்களுக்கான இலவச வீட்டு வசதி, செயற்கை மற்றும் பருத்தியிலான வலைகள், பொறிகள், பிற துணைக் கருவிகள் போன்றவற்றை மீனவர்களுக்கு வழங்குதல் மற்றும் மீன்பிடி பகுதிகளில் கிளைச் சாலைகளை அமைத்தல் ஆகியவற்றுக்கான பயனாளிகளைக் கண்டறிய உதவுதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. மீனவர் நலம் நாடும் வளத் திட்டங்களைக் கண்டறிந்து ஒப்பளித்தல் - ஊராட்சி ஒன்றிய குளங்களிலும் நீர்த்தேக்க ஆதாரங்களிலும் மீன்பிடி குத்தகைக்கு கட்டணங்கள் விதித்தல்.

2. தொடர்புடைய கிராம ஊராட்சியுடன் கலந்து கடல்வாழ் உயிரின வளர்ப்பு/உவர் நீர் மீன்வளர்ப்பு ஆகியவற்றிற்குரிய பகுதிகளைத் தேர்ந்தெடுத்தல் - பல்வேறு திட்டங்களின்கீழ் உதவி பெறுபவர்களைத் தேர்ந்தெடுத்தல் – கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வசதி செய்தல் - தேர்ந்தெடுக்கப்பட்ட தனிநபர்/ கூட்டுறவுச் சங்கங்களுக்கு, படகுகளையும் தளவாடங்களையும் ஒப்பளித்து வழங்க உதவுதல் - மீன் பிடிதளம், காயவைக்கும் இடம், சூறாவளி, புகலிடங்கள் ஆகியவற்றைப் பராமரித்தல், கட்டுப்படுத்துதல்.

3. மீன் குளிர்ப் பதனக் கிடங்கு, மீன் பதப்படுத்துதல், சிப்பங்கட்டுதல், பாதுகாத்தல் ஆகியவற்றில் மீனவர்களுக்குப் பயிற்சியளிக்க வசதிச் செய்தல்.

4. உள்நாட்டு கடல் மற்றும் உவர் நீர் மீன் வளர்ப்பு திட்டம் மற்றும் அரசுத் துறையின் அதிகார எல்லைக்குள் செயற்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் ஆய்வு செய்தல், மீன்துறையின் உதவி இயக்குநர், மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, உவர்நீர் மீன் வளர்ப்போர் முகமை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் அலுவலரின் அதிகார எல்லைக்குள் உள்ள ஊராட்சி ஒன்றியக்குழுவின் சீராய்வு கூட்டத்தில் கலந்துக் கொள்ளல்.

5. மீனவர்களுக்கான இலவச வீட்டுவசதித் திட்டம், செயற்கை மற்றும் பருத்தியிலான வலைகள், பொறிகள், பிறதுணைக் கருவிகள் போன்றவற்றை மீனவர்களுக்கு வழங்குதல் திட்டம், மீன்பிடிக்கும் பகுதிகளில் கிளைச் சாலைகளை அமைக்கும் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்டத்தில் மீன் பிடிப்பவர்கள் நலன் முதற்கொண்டு ஒட்டுமொத்த மீன் வள மேம்பாட்டிற்கான திட்டங்களைத் திட்டமிட்டு தயாரித்தல்.

2. மாவட்ட ஊராட்சியின் தலைவர் மாவட்டத்திற்கான மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் துணைத் தலைவர் ஆக நியமித்தல்.

3. உணவு மற்றும் வேளாண்மை நிலைக்குழுவானது மீன்வளம் மீனவர் தொடர்பிலான அனைத்துத் திட்டங்களை சீராய்பு செய்து காலமுறைப்படி (மீன்வளத் துறை இயக்குநருக்கு) அரசுக்கு அறிவுரை வழங்குதல்.

4. மீனவர்களுக்கான இலவச வீட்டு வசதித் திட்டம், செயற்கை மற்றும் பருத்தியாலான வலைகள், பொறிகள், பிற துணைக் கருவிகள் போன்றவற்றை மீனவர்களுக்கு வழங்குதல் மற்றும் மீன் பிடி பகுதிகளில் கிளைச் சாலைகளைஅமைத்தல் போன்றவற்றை திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.